*5*

# இயேசுவின் மறுவருகை

*இயேசு பிதாவினிடத்திற்கு ஏறிச் சென்ற காலம் தொடங்கி, அவரது மறுவருகைக்காகக் கிறிஸ்தவர்கள் காத்திருக்கின்றனர். இந்த நிகழ்ச்சியின் பரிமாணம் பற்றியும், இதைப் பற்றித் தரப்பட்டுள்ள மிகவும் கொஞ்சமான தகவல்கள் பற்றியும் ஆழ்ந்து சிந்திக்கையில், இயேசுவின் மறுவருகை பற்றிப் பல கருத்துக்கள் நிலவுவதென்பது திகைப்புக்குரியதாய் இராதிருக்கலாம். இந்தப் பாடத்திலும் இதற்கு அடுத்த பாடத்திலும் நாம், அவரது மறுவருகை பற்றி வேதாகமம் போதிப்பது என்ன என்பதைக் கற்று, போதிக்கப்பட்டுக் கொண்டுள்ள மற்ற கண்ணோட்டங்களையும் பரிசீலனை செய்வோம்.*

## அவரது மறுவருகை பற்றிய உண்மை

"Second coming" [*"இரண்டாம் வருகை"*] *மற்றும்* "Second advent" [*"இரண்டாம் வருகைக்கு முந்திய நிகழ்வு"*] *என்ற சொற்றொடர்கள் வேத வசனங்களில் காணப்படாதிருப்பினும், இந்த நிகழ்ச்சியானது, "மறுபடியும் வந்து" (யோவா. 14:3) மற்றும் "இரண்டாந்தரம் ... தரிசனமாவார்" (எபி. 9:28) என்ற சொல் விளக்கங்களினால் சுட்டிக்காண்பிக்கப்படுகிறது. இயேசுவின் இரண்டாம் வருகையைக் குறிப்பிடுவதற்குப் பல்வேறு கிரேக்க வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.*

*Apokalupsis என்ற வார்த்தை இயேசுவின் மறுவருகையைக் குறிப்பிடுவதற்குச் சிலவேளைகளில் பயன்படுத்தப்பட்டுள்ளது, இது "வெளிப்படுவதற்கு" (1 கொரி. 1:7;* KJV*), "வெளிப்படும்போது" (2 தெச. 1:8; 1 பேது. 1:13; 4:13; 1 பேது. 1:7) என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இயேசு பூமியில் இருந்தபோது, பூமிக்குரிய உடலில் காணப்பட்டார், ஆனால் அவரது முழுமையான, தெய்வீக இயல்பு வெளிப்படுத்தப்படாதிருந்தது. இருப்பினும், அவர் மறுபடியும் வரும்போது, அவரது தெய்வீக மகிமை வெளிப்படுத்தப்படும்* (Gk.: *phaneroo, இது "வெளிப்படும்போது" என்று அர்த்தப்படுகிறது; கொலோ. 3:4).*

*Epiphania என்ற வார்த்தை "வருதல்" அல்லது "தரிசனமாகுதல்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இது இயேசுவின் இரண்டாம் வருகையைக் குறிப்பிடுவதற்கு மாத்திரம் பயன்படுத்தப்பட்டுள்ளது (2 தெச. 2:8ஆ; 1 தீமோ. 6:14; 2 தீமோ. 1:10; 4:1, 8; தீத்து 2:13).*

*Parousia என்ற வார்த்தை இயேசுவின் மறுவருகைக்கு அடிக்கடி பயன்படுத்தப்படுகிற வார்த்தையாக உள்ளது (1 கொரி. 15:23; 1 தெச. 2:19; 3:13; 4:15; 5:23; 2 தெச. 2:1, 8அ; யாக். 5:7, 8; 2 பேது. 1:16; 3:4, 12; 1 யோவா. 2:28).*

இந்தச் சொல்விளக்கங்களும் இவை வேத வசனங்களில் பலமுறை வருதலும், இயேசு மறுபடியும் வருவார் என்பதற்கு மிகுதியான உறுதிப் பாட்டைத் தருகின்றன. இவைகளுடன் கூட, "நாள்," "கர்த்தருடைய நாள்," மற்றும் "கிறிஸ்துவின் நாள்" என்ற சொல்விளக்கங்கள் அவர் எப்பொழுது திரும்பி வருவார் என்ற தருணத்தைக் குறிப்பிடுகின்றன.[1] இரண்டாம் வருகை எப்போது இருக்கும் என்பதை மறைவாகக் குறிப்பிடும்போது, இந்தச் சொற்றொடர்களின் சந்தர்ப்பப் பொருள்கள் மாத்திரமே அதைத் தீர்மானிக்க முடியும்.

## அவரது மறுவருகைக்கான காலம்

இயேசு பிரிந்து சென்றதிலிருந்து, அவரது மறுவருகைக்கான காலம் கள்ளத்தீர்க்கதரிசிகளால் (உபா. 18:20-22ஐ வாசிக்கவும்) வடிவமைக்கப் பட்டது. நன்கு அறியப்பட்ட சில தேதிகள் கீழ்கண்டவாறு தரப்பட்டன:

| | |
|---|---|
| வில்லியம் மில்லர் | அக்டோபர் 22, 1843 |
| சார்லஸ் டேஸ் ரஸ்ஸல் | அக்டோபர் 1914 |
| ஜட்ஜ் J. F. ரூதர்ஃபோர்டு | 1928 |
| ஹெர்பெர்ட் W. ஆர்ம்ஸ்ட்ராங் | 1972 |
| யெகோவாவின் சாட்சிகள் | வசந்த காலம், 1975 |
| ஹால் லின்ட்ஸி[2] | 1995 |

"அந்த நாளையும் அந்த நாழிகையையும் என் பிதா ஒருவர் தவிர மற்றொருவனும் அறியான், பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள்" (மத். 24:36) என்ற இயேசுவின் கூற்றைப் பொருட்படுத்தாமல் இந்தத் தேதிகள் முன்னுரைக்கப்பட்டன. அவரது வருகையானது திருடன் வருகிற விதமாய் இருக்கும் (மத். 24:42-44; 1 தெச. 5:2; 2 பேது. 3:10), அது எதிர்பாராததாக மற்றும் எச்சரிக்கை எதுவுமற்றதாக இருக்கும். இயேசு தமது அப்போஸ்தலர்களிடத்தில், "பிதாவானவர் தம்முடைய ஆதீனத்திலே வைத்திருக்கிற காலங்களையும் வேளைகளையும் அறிகிறது உங்களுக்கு அடுத்ததல்ல" என்று கூறினார் (அப். 1:7).

புதிய ஏற்பாட்டில் மறுவருகைக்கு தேதி எதுவும் தரப்படவில்லை யென்றாலும், இயேசு மறுபடியும் வருவதற்கு முன்பு குறிப்பிட்ட சில விஷயங்கள் நடைபெற வேண்டியுள்ளது என்று அது முன்னுரைக்கிறது:

(1) அவரது பிரிந்து செல்லுதல் மற்றும் அவரது மறுவருகை ஆகியவற்றிற்கு இடையில் வெகுகாலம் கடந்து செல்லும் (மத். 25:19; அப். 3:20, 21).

(2) யூதர்களும் புறஜாதியாரும் ஒரே மந்தையாவார்கள் (யோவா. 10:16).

(3) எருசலேம் வீழ்ச்சியடைய வேண்டியிருந்தது (மத். 24:1, 2; மாற். 13:1, 2; லூக். 21:20-24).

(4) விசுவாச விலக்கம் நடைபெறும் மற்றும் "பாவமனுஷன்" வெளிப்படுவான் (2 தெச. 2:1-3).

*(5) ‘‘பிற்காலங்களில்’’ மக்கள் விசுவாசத்தை விட்டு விலகிச் செல்லுவார்கள் மற்றும் பொல்லாங்குகள் அதிகரிக்கும் (1 தீமோ. 4:1, 2; 2 தீமோ. 3:1-5).*

*(6) அவரது மறுவருகையைக் குறித்து மக்கள் கேள்வி கேட்கக் காரணமாகும்படி வெகு காலம் கடந்து செல்லும் (2 பேது. 3:3-9).*

*(7) அவரது மறுவருகைக்கு முன்பு, வெளி. புத்தகத்தில் விவரிக்கப்பட்டுள்ள நிகழ்ச்சிகள் நடந்தேற வேண்டும்.*

*இது வரையில் நாம் அறிந்துள்ளபடி, இயேசு மறுபடியும் வருவதற்கு முன்பு நடைபெறத் தேவையான யாவும் நடைபெற்றுள்ளன.*

## அவரது மறுவருகையின் இயல்பு

*இயேசு எவ்வாறு மறுபடியும் வருவார் என்பது பற்றி, உணர்வெழுச்சி யூட்டும் பல விவரங்களைப் புதிய ஏற்பாடு தருகிறது. நாம் உயிரோடிருக்கும் போதே அவர் வந்தால் ...*

*நாம் இயேசுவைக் காண்போம்! (1 தெச. 4:16; வெளி. 1:7).*

*நாம் அவரது பரிசுத்த தூதர்களைக் காண்போம்! (மாற். 8:38).*

*நாம் எக்காள முழக்கத்தையும் பிரதான தூதனுடைய சத்தத்தையும் கேட்போம்! (யோவா. 5:28; 1 கொரி. 15:52; 1 தெச. 4:16).*

*அவர் அக்கினி ஜுவாலையுடனும், வல்லமையுடனும் மகிமை யுடனும் மேகங்களின்மீது[3] திரும்பி வருவதை நாம் காண்போம்! (வெளி. 1:7; 2 தெச. 1:7; லூக். 21:27).*

*இயேசு திரும்பி வரும்போது, மரித்த பரிசுத்தவான்களும் அவருடன் வருவார்கள் (யூதா 14) என்று சிலர் போதித்துள்ளனர். “பரிசுத்தம்” அல்லது “பரிசுத்தவான்கள்” என்பது hagios என்ற கிரேக்கப் பெயர் உரிச்சொல்லின் மொழிபெயர்ப்பாக உள்ளது. “இயேசு தமது hagios உடன் வருவாரா?” என்பது கேள்வியாக இருப்பதில்லை - ஏனெனில் அவர் அவ்வாறே வருவார். “Hagios என்பது அவரது ‘பரிசுத்த’ மக்களைக் குறிக்கிறதா அல்லது அவரது ‘பரிசுத்த’ தூதர்களைக் குறிக்கிறதா?” என்பதே கேள்வியாக இருக்கிறது. அவருடன் திரும்ப வரும் ஜீவிகளைக் குறிப்பிடும் ஒவ்வொரு முறையும் அவர்கள் ‘‘தூதர்கள்’’ (மத். 13:39-49; 16:27) அல்லது ‘‘வல்லமையுள்ள தூதர்கள்” (2 தெச. 1:7) அல்லது “பரிசுத்த தூதர்கள்” (மாற். 8:38) என்று அழைக்கப்படுகின்றனர். அவருடன் வரும் “பரிசுத்தவான்கள்” என்பவர்கள் மரித்து பிரிந்து சென்ற நீதிமான்கள் அல்ல ஆனால் தூதர்கள் என்பதாகவே இருக்க வேண்டும். இவர்கள் [நீதிமான்கள்] அவருடன் வரமாட்டார்கள், ஆனால் அவர் மறுபடியும் வரும்போது அவரைச் சந்திப்பதற்காக மரித்தோரி லிருந்து உயிர்ப்பிக்கப்படுவார்கள்.*

## அவரது மறுவருகையின் நிகழ்ச்சிகள்

*இயேசு திரும்ப வரும்போது, நிகழ்ச்சிகள் துரிதமான வரிசைத் தொடரில் நடைபெறும். பின்வரும் பட்டியல், வேத வசனங்களில் வரைக்குறிப்பிடப்பட்டுள்ளது: பூமியில் துன்மார்க்கத்தையும் விசுவாச*

*மின்மையையும் இயேசு கண்டறிவார் (லூக். 17:26-30; 18:8). மரித்தோர் யாவரும் இயேசுவின் குரலைக் கேட்டு ஜீவிப்பார்கள் (யோவா. 5:28, 29; 1 தெச. 4:16). இது கடைசி சத்துருவாகிய மரணத்தின் முடிவாக இருக்கும் (1 கொரி. 15:26, 55; வெளி. 20:14). உயிரோடிருக்கின்ற யாவரும் ஒரு கணத்திலே, கண்ணிமைக்கும் பொழுதிலே மறுரூபமாவார்கள் (1 கொரி. 15:51). உயிரோடிருப்பவர்களும் உயிர்ப்பிக்கப்பட்டவர்களும், இயேசுவை ஆகாயத்தில் சந்திப்பார்கள் (1 தெச. 4:17). முதலாம் வானமும் பூமியும் அழிக்கப்படும் (2 பேது. 3:10-12; மத். 24:35; வெளி. 20:11). பிசாசின் வேலை முடியும், மற்றும் அவனுக்கு வாதை தொடங்கும் (மத். 25:41; வெளி. 20:10). இயேசு தமது அரியணையின்மீது வீற்றிருப்பார், மற்றும் நியாயந்தீர்க்கப் படும்படி எல்லாரும் அவர் முன்பு வெளிப்படுவார்கள் (மத். 25:31, 32; யோவா. 5:22; 2 கொரி. 5:10; 2 தீமோ. 4:1; வெளி. 20:11). தற்காலத்திய இந்த முறைமை யாவும் முடியும், எல்லாவற்றையும் மீளக்கட்டுவிக்கும் முறைமை நடைபெறும் (1 கொரி. 15:24; அப். 3:21; எபே. 1:10). நியாயத்தீர்ப்பிற்கான வேளை தொடங்கியிருக்கும் (வெளி. 20:11-15), மற்றும் "இரட்சிப்பின் நாள்" கடந்து சென்றிருக்கும் (2 கொரி. 6:1, 2). இயேசு, பூமிக்குரிய அதிகாரங்கள் யாவற்றையும் நீக்கிப்போட்டு ராஜ்யத் தைப் பிதாவிடத்தில் ஒப்புவிப்பார் (1 கொரி. 15:24).*

*தற்சமயம் இயேசு, வானம் மற்றும் பூமி முழுவதிலும் ஆட்சி செலுத்து கின்றார் (மத். 28:18; 1 கொரி. 15:27). அவர் மறுபடியும் வரும்போது, அண்டம் முழுவதற்குமான அவரது தனித்துவமான ஆட்சி முடிவடையும். அவரும் பிதாவும் படைப்புக்கு முன்பு கொண்டிருந்த அதே உறவு முறையுடன் ஒன்றுகூடி ஆட்சி செய்வார்கள் (யோவா. 17:5; 1 கொரி. 15:28).*

*அவரது வருகையைச் சுற்றிலும் நடக்கவிருக்கும் இந்த மாபெரும் நிகழ்ச்சிகளுக்கு நாம் யாவரும் தயாராக இருக்க வேண்டும். நமக்காக ஒரு இடத்தை ஆயத்தம் பண்ணும்படிக்கு இயேசு பிரிந்து சென்றார் என்ற அவரது வாக்குத்தத்தம் நிச்சயமாயுள்ளது போலவே, அவர் மறுபடியும் வருவார் என்ற வாக்குத்தத்தமும் உண்மையாகும் (யோவா. 14:3). நாம் அவரது வருகைக்காகக் காத்திருக்க வேண்டும் (2 பேது. 3:12), அதற்காக நாம் ஆவலுடன் காத்திருக்க வேண்டும் (1 கொரி. 1:7; 1 தெச. 1:10; யாக். 5:7), அது நடைபெறும் வரையிலும் சகித்திருக்கத் தொடர வேண்டும் (மத். 25:1-13), மற்றும் அதற்காக ஆயத்தமாவதற்குத் தேவையானவற்றைச் செய்யவேண்டும் (மத். 24:44). அவரது வெளிப்படுதலை விரும்புகின்ற யாவரும் (2 தீமோ. 4:8), அவர் வரும்போது அகம் மகிழுவார்கள் (1 பேது. 4:13), ஆனால் அவருக்குக் கீழ்ப்படிய மறுத்திருக்கின்றவர்கள் பயத்தினால் நிரப்பப்பட்டு துக்கிப்பார்கள் (எபி. 10:31; வெளி. 1:7).*

## முடிவுரை

*இயேசுவின் இரண்டாம் வருகை என்பது மனித வரலாற்றின் உச்சபட்ச நிகழ்ச்சியாக இருக்கும். இயேசுவின் மறுவருகைக்கான காலம் மற்றும் அதன் இயல்பு ஆகியவை பற்றிப் பலர், தவறான கருத்துக்களைத் தரவழைத்திருப்*

*பதினால், அந்த மாபெரும் நாளைப் பற்றியும், அதற்குத் தயாராயிருப்பது எப்படி என்பது பற்றியும் வேதாகமம் கூறுவது என்ன என்பது பற்றி மற்றவர் களுக்கு போதிக்க நாம் தயாராய் இருக்க வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக, நாம் அவரது வருகைக்குத் தயாராக இருக்க வேண்டும். நாம் தயாராயிருந்தால், ஆயத்தத்திற்கான ஒவ்வொரு முயற்சியும் தகுதி வாய்ந்த தாக இருக்கும். நாம் தயாராக இல்லையென்றால், பூமிக்குரிய ஒவ்வொரு சாதனை, வெற்றி மற்றும் நாம் மகிழ்வுடன் அனுபவித்துள்ள மதிப்பு ஒவ்வொன்றும் நமக்கு மாபெரும் தோல்விகளாகக் காணப்படும்.*

---

*குறிப்புகள்*

*[1]மத். 7:22; 1 கொரி. 1:8; 5:5; 2 கொரி. 1:14; பிலி. 1:6, 10; 2:16; 1 தெச. 5:2; 2 தெச. 2:2; 2 தீமோ. 1:18; 4:8; 2 பேது. 3:10 ஆகிய வசனங்களைக் காணவும். [2]மில்லர் என்பவர் பேப்டிஸ்டுப் பிரசங்கியாராகவும், இயேசு 1844ல் மறுபடியும் வருவார் என்று நம்பியிருந்த குழுவின் தலைவராகவும் இருந்தார். இந்தக் குழுவை விட்டுச் சென்ற சிலர் இப்போது ஏழாம் நாள் அட்வென்ட்டிஸ்டுகள் என்று அறியப்படும் பிரிவு சபை உண்டாக்கினார்கள். யெகோவாவின் சாட்சிகள் என்று அறியப்பட வந்த இயக்கத்திற்கு ரஸ்ஸல் என்பவர் முதலாவது தலைவரானார். "யெகோவாவின் சாட்சிகள்" என்ற புதிய பெயருடனான நிறுவனத்திற்கு ரூதர் ஃபோர்டு என்பவர் இரண்டாவது தலைவரானார். தேவனுடைய வானொலி சபை என்று அறியப்பட்ட குழுவை ஆர்ம்ஸ்ட்ராங் என்பவர் தோற்றுவித்து அதன் தலைவரானார். லின்ட்ஸி என்பவர் The Late Great Planet Earth என்ற புத்தகத்தின் எழுத்தாளராக உள்ளார். [3]அவர் எப்படிச் சென்றாரோ அதே விதமாகத் திரும்ப வருவார் (அப். 1:11).*